REGD. NO. M. 6511 ★ தனி:இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 7உ வெள்ளி (19—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 8உ சனி (20—4—57) [இதழ் 267

'ஆந்திர ஆட்சியே! சிமெண்டுத் தொழிற்சாலை துவங்காதே!'

'தனியார் துறையில்தான் துவங்கவேண்டும்'

ஆந்திர ஆட்சியினருக்கு டெல்லி ஆதிக்கத்தின் கட்டளை!

'விடமாட்டோம்! மீண்டும் அனுமதி கோருவோம்' என்கிறார் ஆந்திர முதலமைச்சர்

ஐதராபாத், ஏப். 18—

"அரசாங்கத்துறையில் சிமெண்டுத் தொழிற்சாலை துவங்க அனுமதிக்கவேண்டும் என ஆந்திர அரசாங்கமும் ஐதராபாத் ஆட்சியும் முன்பு கோரின. 'துவங்கக்கூடாது' என அறிவித்து, அனுமதி வழங்க மறுத்துவிட்டது மத்திய அரசாங்கம்!"

இந்தத் தகவலை ஆந்திர சட்டசபையில் தொழில் அமைச்சரான பி. பி. இராசு, துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் அளவில் குறிப்பிட்டுள்ளார்.

"சிமெண்டுத் தொழிற்சாலையை அரசாங்கத்துறையில் துவங்குவது விரும்பத்தகாதது என டில்லி கருத்தறிவித்துள்ளது. சிமெண்டுத் தொழிற்சாலை ஒன்றை உத்திரப்பிரதேச அரசாங்கம் துவங்கி பெரு நஷ்டம் அடைந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டே, மத்திய அரசாங்கம் அத்தகைய கருத்தைக் கொண்டிருக்கின்றது"

என்று, நிதி அமைச்சர் காளா வெங்கட்ராவ் அவர்கள், மேலும் தொடர்ந்த வினாக்களுக்கு விடையாகக் கூறியுள்ளார்.

"நிர்மாணிக்கப்பட இருக்கும் நாகார்சுனசாகர் அணைத் திட்டத்திற்கு ஏராளமான சிமெண்டு தேவையாக இருப்பதால் அதன் அருகிலுள்ள விசயபுரி பகுதியில் சிமெண்டுத் தொழிற்சாலை ஒன்றை அரசாங்க அளவில் துவங்குவதற்கு அனுமதி அளிக்கும்படி மீண்டும் மத்திய அரசாங்கத்தை ஆந்திர ஆட்சி வேண்டிக்கொள்ளுமா?"

என்று, சட்டசபை உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் குறுக்கிட்டு,

"இது விஷயமாக மீண்டும் இம்மாநில சர்க்கார், மத்திய அரசாங்கத்தை அணுகும். அரசாங்கத் துறையில் சிமெண்டு தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவதற்கான அனுமதி தரும்படி மத்திய அரசாங்கத்தை இணங்கச் செய்ய முடியும்,"

எனத் தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

ஆந்திர நாட்டில் எழு சிமெண்டு தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கான உரிமையை இந்தியப் பேரரசு வழங்கியிருப்பவும், அதன்கீழ் இராமகுண்டத்தில் ஒரு தொழிற்சாலை நிர்மாணிக்கக் கோரப்பட்ட கோரிக்கைக்கு அனுமதி அளிப்பது குறித்து இந்தியப் பேரரசு சிந்தித்து வருவதாகவும், தொழில் அமைச்சர் பி. பி. இராசு அவர்கள், ஆந்திர சட்டசபையில் அறிவித்தார்.

விமானங்கள் வாங்க ரூ. 4,20,00,000 கடன்

உலக பாங்கி இந்தியாவுக்கு அளித்துள்ளதாம்

பாரீஸ், ஏப். 19—

1957-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் மார்ச் 31-ந் தேதி வரையில் உலக பாங்கி, இந்தியா, பெர்ஷியா, பெரு ஆகிய மூன்று நாடுகளுக்கு மொத்தம் ரூபாய் 32,10,00,000 கடனுதவி வழங்கியிருக்கிறது.

இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்கென 3 -'ஜெட்' விமானங்கள் வாங்குவதற்கு ரூ. 6,30,00,000 அமெரிக்காவிடம் வாங்கியதற்காக, உலக பாங்கி ரூ. 4,20,00,000 கடனுதவி அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சேதி, தெரியுமா?

புதுடில்லி, ஏப். 18—

மத்திய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் உள்ள 13 அமைச்சர்களின் சராசரி வயது 59! பண்டித பந்த் அவர்கள் தான் அமைச்சரவையில் அதிக வயதானவர். அவருக்கு 69 ஆண்டுகள் எட்டு மாதங்கள் ஆகிறது!

அமைச்சரவையில் குறைந்த வயதுடையவர் ஜெகஜீவன்ராம். அவருக்கு வயது 50!

பண்டித நேருவுக்கு 67 ஆண்டுகள் 6 மாதங்களாகிறது!

சென்னைக்கு ரூ. 73-இலட்சம் கடனுதவி

கால்வாய்த் திட்டத்திற்கு டில்லியின் தாராளம்

புதுடில்லி, ஏப். 18—

1956—57ம் ஆண்டில் அமராவதி, மேட்டூர், வைகை கால்வாய்கள் திட்டத்திற்காக மத்திய அரசாங்கம், மேலும் ரூ. 73 இலட்சம் சென்னை அரசாங்கத்திற்கு கடனாகத் தந்துள்ளதாம்.

பற்றாக்குறைப் பகுதிகளின் நிரந்தர முன்னேற்றத்திற்காக மத்திய அரசாங்கம் ரூ. 48 இலட்சம் கடனாக உதவியுள்ளது என்றும் தெரியவருகிறது.

ரஷ்யா அமைத்துள்ள ராக்கெட் தளங்கள்

கிழக்குஜெர்மனிமீதுமேற்கு ஜெர்மனி குற்றச்சாட்டு

பெர்லின், ஏப். 19—

கிழக்கு ஜெர்மனியில் ரஷ்ய இராணுவத்தினர் சுற்றிலும் ராக்கெட் தளங்களை அமைத்துள்ளதாகவும் இங்கிருந்து மேற்கு ஜெர்மனிமீது அணுஆயுதங்களைப் பிரயோகிக்கலாம் என்றும் மேற்கு ஜெர்மனி பத்திரிகையொன்று தெரிவித்துள்ளதாம்.

இந்தத் தளங்கள், செக்கோஸ்லாவியாவிலிருந்து பால்டிக்வரை அமைக்கப்பட்டுள்ளதாம்.

பம்பாய், மத்தியப்பிரதேசம், பஞ்சாப் முதலமைச்சர்கள் வெற்றிக்கு ஆட்சேபணை!

மூவருக்கு எதிராகத் தேர்தல் மனு தாக்கல்

புதுடில்லி, ஏப். 19—

பம்பாய்முதலமைச்சர் சாவன், மத்தியப் பிரதேச முதலமைச்சர் கட்ஜு, பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரான் ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

இவர்களை எதிர்த்து போட்டியிட்ட அபேட்சகர்கள், இம்மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லுபடியாகாது என்று மனுக்கள் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியப் பாராளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைகளுக்கும் நடைபெற்ற தேர்தல்களில் இதுவரை 105 மனுக்கள் வெற்றி பெற்றவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாம்.

இந்த மனுக்களை விசாரிக்க, தனி நீதிமன்றம் அமைக்கப்படும்.

குழந்தைகள் மருத்துவப் பயிற்சிக்கு உதவி

நியூயார்க், ஏப். 18—

சென்னைப் பல்கலைக் கழகத்தில் குழந்தைகள் மருத்துவப் பயிற்சிக்கான வசதியை அபிவிருத்தி செய்வதற்கு 38,000 டாலர் மானியம் அளிப்பதற்கு ஐ. நா. குழந்தைகள் நிதி நிர்வாகக் கழகம் அனுமதியளித்துள்ளது.

குழந்தைகள் மருத்துவப் பயிற்சிக்கு அளிக்கப்படும் உதவி இந்தியாவுக்கு இதுவே முதல் தடவையாகும்.

இந்தத் திட்டத்தின்கீழ் 8 பேர்களுக்கு ஓராண்டுக்காலம் பயிற்சி தரப்படும்; பின்னர் அவர்கள், குழந்தைகள் மருத்துவ உயர்தர ஆசிரியர்களாகப் பணியாற்றுவார்கள்.

அடித்தாலும் அணைத்தாலும் அகல விரும்பாத தர்மப் பத்தினிகளாம்!

பலம் பொருந்திய வளமான இந்தியாவைக் காணுவது அவர் இலட்சியமாம்!

தொழிலதிபர்கள் சார்பில் பிர்லா பிரலாபிக்கிறார்!

பம்பாய், ஏப். 18—

"தொழில் துறையில் தனியார் துறை அல்லது பொதுத் துறை என்ற பாகுபாடு எதுவும் எனக்குக் கிடையாது; ஆனால் இருப்பது ஒரே ஒரு தேசியத் துறை என்பதேயாகும். அதற்குரிய நமது பங்கை ஆற்ற நாம் அழைக்கப்படுகிறோம்.

"நாட்டின் உயர்ந்த நலத்தைக் கருத்தில்கொண்டு, அரசாங்கத்தைத் தொல்லைக்குள்ளாகக் கூடிய எந்த வினையையும் தொழிலதிபர்கள் செய்யக் கூடாது"

என்று, தொழில் அதிபர்களுக்கு, தொழிலதிபர்களின் அரசர்க்கரசராக விளங்கும் கன்ஷியாம் தாஸ் பிர்லா வேண்டிக்கொண்டுள்ளார்.

அவருக்கு 'பத்ம விபூஷன்' என்ற பட்டத்தை வழங்க, உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அது சமயம், அவர் பேசும் பொழுது மேலும் குறிப்பிட்டதாவது:—

"தொழில் துறையில் அரசாங்கம் மேலும் பரீட்சை செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், நம்முடைய (தொழிலதிபர்கள்) சமூகம் அமைதியாக இருக்கவேண்டியதாக இருக்கக்கூடும்; ஆனால், பலம் பொருந்திய செழுமையான இந்தியாவை நோக்கி நாம் அனைவரும் ஒத்துழைத்து ஒன்றுபட்டு நடந்து செல்ல வேண்டும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

"தனது கணவன்மீது எப்பொழுதும்குறைபட்டுக்கொண்டே இருந்தாலும், அவனை வெறுத்து ஒதுக்கிவிடத் துணியாத இந்திய மனைவிபோல் இந்தியத் தொழில் அதிபர் சமூகம் இருக்கிறது. அதுபோன்றே இந்திய அரசாங்கம் செய்வதாலும் செய்யாது விடுவதாலும் ஏற்படுகின்ற தீமைகளைக் குறித்து அடுத்தடுத்துக் குறைபட்டுக் கொண்டபோதிலும், அரசாங்கத்தை ஆதரிப்பதிலிருந்து, நமது சமூகம் என்றும் விலகியது கிடையாது"—என்றும் பிர்லா குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் நிபந்தனைக்கு எதிர்ப்பு

எதிர்பாராத நேரத்தில் சேர்க்கப்பட்டதாம்

சிங்கப்பூர் அரசியல் திட்டத்தின் சதி?

சிங்கப்பூர், ஏப். 18—

சிங்கப்பூருக்கு உள்நாட்டு சுயாட்சி வழங்குவது சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதிநிதிகளும், சிங்கப்பூர் பிரதிநிதிகளும் ஒரு உடன்படிக்கைக்கு வந்திருப்பது தெரிந்ததேயாகும்.

அந்த நகலில், நடைபெற இருக்கும் தேர்தலில் புரட்சி வேலைகளில் ஈடுபட்ட கட்சிகள் பங்கு கொள்ளக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதல்லவா?

இந்த நிபந்தனையைக் கண்டித்து, வலதுசாரி லிபரல் சோஷியலிஸ்டு கட்சி, தீவிர இடதுசாரி மக்கள் செயல் கட்சி, ஐக்கிய மலேயா தேசிய நிறுவனம் ஆகிய மூன்று கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனவாம்.

உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள 4 காலனி கட்சிகளில் இந்த மூன்று கட்சிகளும் கடைசி நேரத்தில் யாரும் எதிர்பாராது இருந்தபோது இந்த நிபந்தனை சேர்க்கப்பட்டது என்று குற்றம் சாட்டியுள்ளனவாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—4—57 வெள்ளி

செவ்வனே செய்யவேண்டும்

★

சத்தான உணவானாலும் சுத்தமானதாக உட்கொண்டால்தான், உடல் நலம் குன்றாது இருக்கக்கூடும். குடிநீரும் குளிநீரும் மாசற்றதாக இருந்தால்தான், உடல்நலக்காப்புக்கு ஊறு நேராது இருக்கக்கூடும். சுவாசிக்கும் காற்றும் துர்நாற்றம் விசாததாக இருக்கப் பார்த்துக் கொண்டால்தான், கொடிய தொத்து நோய்களுக்கு நம்மை ஆளாக்கிக் கொள்ளாமல் நாம் நலமாக வாழ்வது சாத்தியமாகும்.

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு—கூழானாலும் குளித்துக் குடி' என்பது, அன்றொருநாள் வாழ்ந்த பாட்டியின் பழந்தமிழ்ச்சொல். இச்சொல்லின் உள்ளடக்கந்தான் நவீன சுகாதாரக் கோட்பாட்டின் அடிப்படை—அரிச்சுவடி.

வயிற்றை நிரப்பவேண்டும், இன்பம் நுகரவேண்டும், என்றும் சாகாது இருக்கவேண்டும் என்பதில் காட்டுகின்ற அவாவின் அளவிற்கு, வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், வீதியை அசுத்தப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், தொத்து நோய்களுக்கு இடமளிக்காது இருக்க வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கரையும் இருப்பது கிடையாது. கற்றிருப்பவர் என்பவரில் பலரும், கல்வி அறிவு பெற்றில்லாதோரில் முழுத்தொகையினரும், இவ்வகையில் ஒரு மாதிரியாகத்தான் நடந்துகொண்டு வருகின்றனர்.

சுகாதாரத்தைப் பேணிக்காப்பதில் பொதுவாக மக்களிடம் காணப்பெறும் இவ்வலங்கோலத்திற்கும் அலட்சியத்திற்கும் மக்களின் கல்லாமையை நொந்து கொள்ளுவதா? கருத்தில்லாமையைக் காய்ந்து கொள்வதா? பண்பில்லாமையைப் பழிப்பதா? வறுமை நிலையைச் சாடுவதா? அதன் விளைவாக வந்த வாழத்தெரியாமையைக் கடிவதா?

சென்னை நகரின் பெரும் பகுதியில் எங்கும் மல நாற்றம்; எங்கும் சிறுநீர் நெடிநாற்றம். சென்னையில் ஏழை மக்கள் வாழும் பகுதி துர்நாற்றக் கிடங்கு.

தெரிந்தவர் நயமாகத் தடுத்துக்கொண்டு இருக்கும் பொழுதே, குழந்தையைப் பெற்ற தாய், தன் குழந்தையை வீதிப்போரத்தில் விட்டு ஆபாசப்படுத்துவாள். தகாத செயல் கூடாது என நல்லுரை கூறியவரை அழகுத்தமிழ் நடையில் அதட்டிப் பேசுவாள். 'ஆகட்டும்; வேலைக்குச் சென்றவன் வீடு திரும்பட்டும்; வேறு முறையில் கண்டிக்கச் சொல்லுகிறேன்' எனச் சூளும் உரைப்பாள். அதைத் தவறாது நிறைவேற்றவும் செய்வாள்.

கொண்டவனும் குதிப்பான்—விட்டேனா பார்! வைக்கிறேனா பார்! என்று வம்புக்கிழுப்பான். சுகாதாரம் பேசினவன், வாய் மூடி மவுனியாகி 'நமக்கேன் வீண் வம்பு? நாம் யார் சுகாதாரம் போதிக்க?' என்று, தகாது செய்துவிட்ட குற்றவாளிபோல் தன்னையே நொந்துக் கொண்டு காலங்கடத்தத் துணிந்துவிடுவான்.

நாட்டு மக்கள் பெரும்பான்மையினரின் நிலை இது. வேதனை தரும்நிலை! வெட்கப்பட வேண்டிய நிலை!

தேர்தல் நேரத்தில்தான், ஏழை மக்கள் வாழும் பகுதிகளில், சந்துபொந்தெல்லாம் வாக்காளர்களைத் தேடித் திரிகிறார்கள் நகராட்சி மன்றத் தேர்தலுக்கு நிற்கும் பொதுநல ஊழியர்கள். வெற்றிக்குப் பிறகு, மின்சார விசிறிக் காற்றும், மிருதுவான விற்றிருப்பும், பகட்டான நட்புறவும் தங்கிடும் சுகத்தை நாற்றுக்கு நாறும் நுகருவதிலேயே மனத்தைப் பறிகொடுத்து வருகின்றனர்.

அவர்களில் சிலர் சுகாதாரக் குழு உறுப்பினர்களாகவும் இடம் பெறுகின்றனர். அவர்களோ, மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் தங்கள் கடமையை விரட்டியடித்துவிட்டு, எந்தக் காட்சிச்சாலையில் எந்த நிழல் படம் நடைபெறுகிறது; எந்த சிற்றுண்டிச்சாலையில் எத்தகைய சுவையான சிற்றுண்டிகள் விற்கப்படுகின்றன என்பதைக் கண்டறிவதில், தங்கள் அந்தஸ்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சுகாதாரத்துக்கும் மக்களுக்கும் நெடுநாள் பகை. அவர்களுக்குக் கருத்து விளக்கம் தந்து சுகாதாரத்தைக் காப்பாற்றவேண்டிய நகரப் பிதாக்களுக்கோ, மீண்டும் தேர்தலில் வெற்றி பெறுவதே பெருங்கவலை.

இந்த அவல நிலையில், சென்னை நகராட்சி மன்றத் தலைமை அலுவலர், சுகாதாரத்தைப் பாதுகாக்கவும், அதற்குக் கேடு சூழ்பவர்களை தடுத்து நிறுத்தவும், தீவிரமாகப் பணியாற்றப் போவதாக அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பு நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருக்கின்றது. அவர் வெற்றிபெற விழைகிறோம். அதைச் செவ்வனே செய்ய வேண்டும் என அவரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஊழியர்கள் உதவி நிதித் திட்டம்

ரூ. 500 பெறுபவர்களுக்கும் பரவலாக்கப்படும்

புதுடில்லி, ஏப். 17—

ஊழியர்கள் உதவி நிதி (பிராவிடணட்பண்டு) திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேருவதற்கான தகுதியை மாதத்தில் ரூ. 500 ஊதியம் பெறுபவர்களுக்கும் பரவலாக்குவதென்று மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதுவரையில், இச்சலுகை ரூ. 300 வரை ஊதியம் பெறுபவர்களுக்கே அனுமதிக்கப்பட்டு வந்தது.

4,500 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 20 இலட்சம் ஊழியர்கள் இச்சட்டத்தினால் பயன் பெறுகிறார்களாம்!

உலகிலேயே மிகப் பெரிய திட்டம்

இராஜஸ்தானில் உருவாகிறது

வறண்ட பூமிகள் வளம் பெறும்

செயபுரி, ஏப். 17—

வடக்கு - வடமேற்கு இராஜஸ்தானிலுள்ள வறட்சி மிக்க பகுதிகளை நல்ல விளைச்சல் தரும் வயலாக்க பெரியதொரு நீர்ப்பாசனத் திட்டத்தை இராஜஸ்தான் அரசாங்கம் தயாரித்துள்ளதாம்.

இந்தக் கால்வாய்த் திட்டம் முடிந்தவுடன் 34 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும்; வறண்டமண் வளம் பெறும்.

பஞ்சாப்மாநிலத்தில் சட்லெஜ், பியாஸ் நதிகள் சந்திக்கும் இடத்திலிருந்து கால்வாய் வெட்டப்பட்டு, பஞ்சாப் மாநிலத்தில் 110 மைல்கள் வரை கடந்து, பிறகு இந்தக் கால்வாய் இராஜஸ்தானை அடையும்.

இராஜஸ்தானின் வறண்ட பகுதிகளான கங்கா நகர், பிகானீர், ஜெயசால்மர் ஆகிய மாவட்டங்களுக்கும் நீர்ப்பாசன வசதி ஏற்படும்.

உலகிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும் என்று தெரிய வருகிறது.

கேட்டீரா, சேதி!

உலகிலேயே மிகப் பெரிய இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலை நெய்வேலியில் நிறுவப்படுமாம்.

இங்கு இரசாயன உரத்தை உற்பத்தி செய்து, மலிவாக விற்பனை செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

ஆனால், நிபுணர்களைக் கலந்தாலோசித்தும், அயல்நாடுகளின் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட பின்னர்தான் உர உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட முடியுமாம்.

டாக்டர் காரே விலகிவிட்டார்

காரணம் பற்றி விளக்கம்

நாகபுரி, ஏப். 17—

டாக்டர் காரே 1949-ல் இந்து மகா சபையில் சேர்ந்து, மூன்று முறை அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இந்துமகா சபையின் பொதுச் செயலாளர் தேஷ்பாண்டேயின் எதேச்சாதிகார உத்தரவைக் கண்டித்து, துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து இப்போது அவர் விலகிக்கொண்டார்.

மக்கள் உரிமைகளை அரசாங்கம் கைப்பற்றுவதைக் கண்டிக்கவே, தான் இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட முடிவு செய்திருந்ததாக டாக்டர் காரே கூறியுள்ளார்.

'தேஷ்பாண்டேயின் குறுக்கீடு, தான் போட்டியிட முடியாத நிலையை உண்டாக்கிவிட்டது' என்று, குற்றம் சாட்டியுள்ளார்.

தான் மகா சபையிலிருந்து விலகிக்கொண்டபோதிலுமகூட, சபையின் கொள்கைகளை கடைபிடிப்பதாகக் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர்களில் மாஜியானோர்!

நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற காரணத்தால், தாங்கள் இதுவரை வகித்துவந்த மத்திய அரசாங்க அமைச்சர் பதவியை இழக்க வேண்டியவர்களானோர்:-

1. டாக்டர் சையத் முகமத்.
2. எச். வி. படாஸ்கர்
3. எம். சி. ஷா
4. ஏ. சி. குகா
5. ஓ. வி. அளகேசன்
6. மரகதம்-சந்திரசேகரன்
7. ஜி. கே. பான்ஸ்லே

மாவட்ட மன்றங்களின் ஊழியர்கள் ஊதியம்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஏப். 18—

நகரசபைகளிலும், மாவட்ட மன்றங்களிலும் பணியாற்றுபவர்களும் எதிர்பாரா செலவுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களுமான ஊழியர்களின் சம்பளத்தை கிராக்கிப் படி உட்பட மாதம் ரூ. 30 என்று வரையறுத்துவிட வேண்டும் என்று சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்.

இத்துடன், மார்ச் முதல் 'விசேடப் படி'யாக மாதந்தோறும் ரூ. 12 அளிக்க வேண்டுமென்றும் நகரசபைகளுக்கும், மாவட்ட மன்றங்களுக்கும் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாம்.

கிராம அதிகாரிகள் கோரிக்கைகள்

பரிசீலனை செய்வதாக அமைச்சர் கூறுகிறார்

சென்னை, ஏப். 17—

கிராம அதிகாரிகளின் வேலை நிலைமையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக — குறிப்பாக அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி சென்னை அரசாங்கம் யோசித்து வருவதாக அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்துள்ளார்.

மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு ஒரு கிராமாதிகாரி வீதம் நியமிப்பது பற்றியும், கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக்குவது பற்றியும் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் சுமார் 40,000 கிராம அதிகாரிகள் இருக்கின்றனராம்.

இலட்சணம் பாரீர்!

சென்னை நகரில் சுத்தமான பால் விநியோகத்தை அதிகரிப்பதற்கு, நகருக்கு அருகிலுள்ள மாதவரத்தில் ஒரு பால் காலனியை சென்னை சர்க்கார் 800 ஏகரா நிலத்தில் ஏற்படுத்துவார்களாம்! இத்திட்டம் முழுமைக்கும் ரூ. 123 இலட்சம் செலவாகுமென்றும், முதல் கட்டத்தில் 400 பசு, எருமைகளுடன் இது ஆரம்பிக்கப்படுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

[......நேற்றைய இதழில், டில்லியில் 76,000 சதுர அடி மைலில் ரூ. 3,28,00,000 செலவில் பால் பண்ணை அமைப்பது பற்றிய விவரம் தரப்பட்டிருக்கிறது.]

திருக்குறள்-ஒரு இலக்கியச் செல்வம்!

உலக மக்கள் அனைவரும் உணர வழிகோல வேண்டும்

கல்கத்தா, ஏப். 17—

"ஒரு மொழியிலுள்ள சிறந்த இலக்கியச் செல்வத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், அதைப் பிற மொழிகளில் மொழி பெயர்ப்பதுதான் சிறந்த வழியாகும்; அப்போதுதான் அந்த இலக்கியங்கள் உலகப் புகழ் பெறமுடியும்," என்று, கல்கத்தா திருவள்ளுவர் மன்றத்தில் பேசுகையில் டாக்டர் ஏ. இராமசாமி(முதலியார்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளை மற்ற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டுமென்றும். அவ்வாறு செய்தால்தான் தமிழ் இலக்கியத்திலுள்ள இந்தச் செல்வத்தின் செழிப்பினையும் சிறப்பினையும் மக்களனைவரும் உணரச் செய்ய முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசர் சிலை அகற்றப்படுமா?

திருவனந்தபுரம், ஏப். 17—

திருவாங்கூர் மகாராஜாவின் உருவச்சிலை யொன்று கேரள மாநில முதலமைச்சரின் அறையில் இருந்து வருகிறது.

'அதை அப்புறப்படுத்தும் யோசனை உண்டா?' என்று கேட்டதற்கு முதலமைச்சர், 'அதைப் பற்றி யோசித்து முடிவு செய்யப்படும் என்று பதிலளித்ததாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

கேரள சர்க்கார் அலுவலகத்தில்

லெனின் படம்?

திருவனந்தபுரம், ஏப். 17—

கேரள அரசாங்கத்தின் அலுவலகத்தில் முதலமைச்சரின் அறையில் காந்தியார் படம் இருந்து வருகிறது. 'அதன் பக்கத்தில் லெனின் படம் ஒன்று வைத்தால் நன்றாக இருக்கும்,' என்று நிருபர் ஒருவர் கூறியதற்கு முதலமைச்சர், 'அது நல்ல யோசனை' என்று வரவேற்றுள்ளதாக செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

உள்ளாட்சிக் கழகங்கள்

ஜனநாயக நிறுவனங்களாக இயங்குவதற்குத் திட்டம்

திருவனந்தபுரம், ஏப். 17—

கேரள மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி, உள்ளாட்சிக் கழகங்களை உண்மையான ஜனநாயக நிறுவனமாக்குவதுபற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதாம். சட்டசபையின் வரவு—செலவுத் திட்டக் கூட்டத்தில் இதற்கான மசோதா ஒன்று கொண்டு வரப்படுமாம்.

வீட்டு வரி விலக்கு: நகரசபைகளுக்கு உத்தரவு

கோழிக்கோடு, ஏப். 17—

ஆண்டுக்கு ரூ. 60-ம், அதற்குக் குறைவாகவும் வாடகை வருவாய் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு வீட்டு வரி விலக்குத் தரலாம் என்று கேரள நகர சபைகளுக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தியாவில் இடமில்லையாம்!

'லீக்' பற்றி தேபர் கருத்து

எர்ணுகுளம், ஏப். 16—

காங்கிரஸ் தலைவர் தேபர் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில், முஸ்லீம் லீக் வகுப்புவாத ஸ்தாபனம் என்றும், அது கேரளத்திலோ இந்தியாவிலோ இயங்குவதற்கு நியாயமில்லை என்றும் கூறியுள்ளார்.

'கொள்கைகளை பரப்ப வாள் ஏந்தோம்'

குருஷ்சேவ் கூறுகிறார்

மாஸ்கோ, ஏப். 18—

"பொதுவுடைமைக் கொள்கைகளை எவர் மீதும் திணிக்க ஒரு போதும் நாங்கள் வாள் ஏந்த மாட்டோம்; அவ்வாறே எந்த ஆயுத பலத்தைக் கொண்டும் பொதுவுடைமைக் கொள்கைகளை அழித்துவிட முடியாது; சரித்திரம் இதை நிரூபித்துவிட்டது.

"சோஷலிச சமுதாய அமைப்பை உருவாக்கும் எங்கள் முயற்சியைத் தடைப்படுத்தாதீர்கள். அவ்வாறான அமைப்பு முறையை மாற்றியமைக்க முதலாளித்துவ நாடுகள் முயற்சிக்கின்றன,"—என்று, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் குருஷ்சேவ் எச்சரித்துள்ளார்.

மேலும் அவர், 'உலகத்திலுள்ள எல்லாக் கருத்தினரும் சேர்ந்து வாழவேண்டியதே' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கழகச் செய்திகள்

திருபெரும்புதூர்-தண்டலம்கிராமம்

24-3-57-ல், செங்கற்பட்டு மாவட்டம் திருபெரும்புதூர்-82 தண்டலம் கிராம தி. மு. கழக அமைப்புக்கூட்டம் தோழர் த. வே. ஏகாம்பரம் இல்லத்தில்—அவரது தலைமையில் நடைபெற்ற போது, தோழர்கள் த. வே. ஏகாம்பரம் செயலாளராவும், த. க. இராமச்சந்திரன் துணைச் செயலாளராகவும், த. ந. இராமசாமி பொருளாளராகவும், த. வ. இராமலிங்கம் மாவட்டப் பிரதிநிதியாகவும், க. முத்து, த. சிவப்பிரகாசம், இரா. தேவராசன், ந. கலியாணசுந்தரம், த. து. அரங்கநாதன், த. கோ. கசேந்திரன், பு. கோ. நடராசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, துவக்கவிழா பற்றியும் முடிவெடுக்கப்பட்டது.

கொடைக்கானல்வட்ட- பாச்சலூர்

29-3-57-ல், மதுரை மாவட்ட கொடைக்கானல்—பாச்சலூர் தி. மு. கழகத் துவக்கவிழா, தோழர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ஊமைத்துரை கொடியேற்றி வைத்தும், தோழர்கள் பழனிச்சாமி, முத்துக்கூடை, சண்முகம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிய பின், தேநீர் விருந்துடன் நாட்டுப் பாடல் இசைக்க கூட்டம் முடிவுற்றது.

சென்னை-கோடம்பாக்கம்

31-3-57 காலை 9 மணிக்கு மேற்படி வட்டக் கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில் தோழர் சோ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, தேர்தலில் உழைத்தத் தோழர்களுக்கும்—தேர்தல் நிதி யளித்த ஸ்டுடியோ தொழிலாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டபின், வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொண்டும், செயற்குழுவிற்கு மேலும், தோழர்கள் ஏ. எஸ். ஜேசுபாதம், நெடுமாறன், சிவப்பிரகாசம், ஆனந்தன், பி. சம்பந்தம், ஐ. எல். நாதன், இளஞ்செழியன், தரணி, இராமச்சந்திரன், குமார், அருட்சிவவர்மன், குருநாதன் ஆகியோர் தெடுக்கப்பட்டனர்.

3-4-57 மாலை 6 மணிக்கு கோடம்பாக்கம் பஸ் நிலைய அருகில், மேற்படி கிளையின் சார்பில் தோழர் ஏ. எஸ்- ஜேசுபாதம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், என். சீவரத்தினம், ஆர். எஸ். பாண்டியயன், சா. வில்லவன், தரணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை-மீனம்பாக்கம்

1—4—57ல் சென்னை - மீனம்பாக்கம் தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல் தோழர் சி. இராமன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ச. ஏழுமலை செயலாளராகவும், அ. செயராமன் துணைச் செயலாளராகவும், ஏ. சந்தியப்பன் பொருளாளராகவும், நா. பாலன் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கவுண்டம்பாளையம்

4—4—57 இரவு இவ்வூர் ஆண்டவன் இல்லத்தில் தோழர் இரா. துரை முன்னிலையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாவில், தோழர்கள் கா. மா. வெங்கடாசலம் செயலாளராகவும், பெ. இராமசாமி துணைச் செயலாளராகவும், மா. யாரப்பன் (அப்பாரு) பொருளாளராகவும், பா. ஆண்டவன் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் - பாண்டுப்

1—4—57 மாலை 6 மணிக்கு, தோழர் எஸ். ராசமணி இல்லில் மேற்படியின் கிளையின் செயற்குழு, தோழர் கே. எஸ். அய்யா தலைமையில் நடைபெற்றபோது, பொருளாளராக தோழர் கே. முத்துசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, சேலம் தேர்தல் வழக்கு நிதி குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வெங்கட்ட சமுத்திரம்

3—4—57ல் இவ்வூரில் அமைக்கப்பட்ட தி. மு. கழகத்திற்கு, தோழர்கள் ஏ. விருதாசலம் செயலாளராகவும், வி. ஆர். இராமசாமி துணைச் செயலாளராகவும், எஸ். செல்லமுத்து பொருளாளராகவும், வி. ஆர். இராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், சித்தான் விளம்பர உறுப்பினராகவும் மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, கழக மனை வாடகைக்கு எடுப்பது பற்றியும் பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

புதுவை:

7—4—57 மாலை 6-30 மணிக்கு புதுவை தி. மு. கழகச் செயற்குழு, செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, மதுரையில் கம்யூனிஸ்டுகளின் தாக்குதலைக் கண்டித்தும், மே விழாவும்—பாராட்டு விழாவும் நடத்துவது பற்றியும் முடிவெடுக்கப்பட்டது.

கரூர்—திருக்காம்புலியூர்:

7—4—57 இரவு 7-30 மணிக்கு இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். மருதமுத்து தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எஸ். மருதமுத்து செயலாளராகவும், தி. மா. இராமசாமி துணைச்செயலாளராகவும், கே. கந்தசாமி பொருளாளராகவும், ஆ. [illegible]சன் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 12 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக வளர்ச்சி குறித்து தோழர்கள் எம். கே. கரிகாலன், வி. சுப்பிரமணியம் ஆகியோரும் தோழர்கள் எஸ். மருதமுத்து, தி. மா. இராமசாமி, முருகேசன், தங்கவேலு ஆகியோர் படிப்பகம் அமைக்கவேண்டியது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

குன்னூர்—கொலக்கொம்பை

7—4—57 இரவு 10 மணிக்கு, மேற்படியூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் சீ. வா. சுந்தரேசவான் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில், இயல் பகுதியை கோவை-மு. இராமநாதனும், இசை நிகழ்ச்சியை கோவை-இளங்கவி குழுவினரும், கூத்து நிகழ்ச்சியை கோவை-பாபுகானும் பங்கேற்று நடத்தினர்.

ஆழ்வார்பேட்டை

7—4—57-ல், இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். தென்னன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கோமாஸ் செயலாளராகவும், கட்டபொம்மன் துணைச் செயலாளராகவும், முகம்மது அலி பொருளாளராகவும், மற்றும் 8 பேர் செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அலாவாக்கோட்டை

7—4—57-ல், இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் பெரு. கருப்பையா தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எஸ். பழனியப்பன் செயலாளராகவும், கா. இராமநாதன் துணைச் செயலாளராகவும், கு. சுந்தரம் பொருளாளராகவும், மு. முத்துக்கண்ணு மாவட்டப் பிரதிநிதியாகவும் 11 பேர் செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல்லை—மணலூர்:

7—4—57 மாலை 4-மணிக்கு இவ்வூரில் தோழர் இரா. தமிழரசு தலைமையில் துவக்கப்பட்ட தி. மு. கழகத்திற்கு, தோழர்கள் சி. மா. முத்துமாலை செயலாளராகவும், சி. த. பக்கிள்துரை துணைச்செயலாளராகவும், கி. த. இரத்தினபாண்டி பொருளாளராகவும், மூ. பெரியசாமி விளம்பர உறுப்பினராகவும், ம. அ. நடேசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருச்சி 17-வது வட்டம்:

15—4—57-ல் திருச்சி 17-வது வட்ட தி. மு. கழகக் கிளைத் துவக்கவிழா, திருச்சி நடுசுவான் காரத்தெரு (1929-ம் ஆண்டு நன்கொடையாக எழுதிவைக்கப்பட்ட) 4- ஏ. எண்ணுள்ள கட்டிடத்தில் தோழர் மு. கருணாநிதியால் நடைபெற்றபோது, தோழர்கள் இரா. செழியன், ஏ. பி. தர்மலிங்கம், எம். எஸ். மணி, எஸ். ஏ. ஜி. ராபி, எஸ். நெடுமாறன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கோவை—காட்டூர் (10-வது வட்டம்)

7—4—57 காலை 9 மணிக்கு, மேற்படி கிளையின் நிர்வாக உறுப்பினர் கூட்டம் நடைபெற்ற போது முக்கிய இரு தீர்மானங்கள் நிறைவேறின.

*　　*　　*

11—4—57 பிற்பகல் 4 மணி அளவில், தோழர் க. கோபால் தலைமையில், இக்கிளைக் கழகத் திறப்பு விழாவை தோழர் சி. பி. சிற்றரசும், தோழர் சி.டி. தண்டபாணி கொடியேற்றிவைத்தும், தோழர்கள் எஸ். ஏ. இராசமாணிக்கம், மு. இராமநாதன், சி. தேவராசு, மற்றும் பலர் சொற்பொழிவும் ஆற்றினர்.

நிலக்கோட்டை—பூசாரிப்பட்டி

7—4—57 மாலை 6½ மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் இ. காத்தான் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் டி. இராசாராம், எம். சையது இப்ருகிம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

மதுராந்தகம்-சிறுநல்லூர்

7—4—57ல் மேற்படியூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் பி. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது. தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் துவக்கிவைத்து, கழகக் கொள்கை விளக்கமும், அரசியல் நிலையையும், விவசாயிகள் பிரச்சினையையும் தெளிவாக்கி சொற்பொழிவாற்றினர்.

*　　*　　*

8—4—57 மேற்படி கிளையின் உறுப்பினர் கூட்டம் தோழர் பி. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் இ. ஏழுமலை செயலாளராகவும், முனுசாமி துணைச்செயலாளராகவும், எட்டி பொருளாளராகவும், செல்லப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் 16 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காஞ்சீபுரம்:

6—4—57 இரவு 10 மணிக்கு பிள்ளையார்பாளையம், புதுப்பாளையத் தெரு, தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எஸ். முருகேசன் செயலாளராகவும், இரா. பாஸ்கரன் துணைச் செயலாளராகவும், வே. ஏகாம்பரம் பொருளாளராகவும், 18 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

10—4—57 இரவு 9 மணிக்கு, மேற்படி கிளையின் செயற் குழு, கழகக் கட்டிடத்தில் தோழர் வா. வேலு தலைமையில் நடைபெற்றபோது, 4 முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம்—அன்னதானப்பட்டி

6—4—57 இரவு 9 மணிக்கு, சேலம் — அன்னதானப்பட்டி (27-வது வட்ட) தி. மு. கழகக் கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஆ. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, செயலாளர் என். ஆர். தாஸ் விலகலை ஏற்றுக்கொண்டு, இவ்வாண்டிற்கு தோழர்கள் சி. பழனியப்பன் செயலாளராகவும், கு. மு. கோபால் துணைச் செயலாளராகவும், ஆ. பழனியப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், வாக்காளர்களுக்கு நன்றியும், சொற்பயிற்சி மன்றம் துவக்குவது பற்றியும் முடிவெடுக்கப்பட்டது.

தி. நா. அதவத்துறை-பள்ளக்காடு

7—4—57 அன்று இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் வி. எம். கணேசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எம். காத்தான் செயலாளராகவும், எம். வைரமணி துணைச் செயலாளராகவும் ஏ. பிச்சையா பொருளாளராகவும், வி. மருதமுத்து மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, துவக்கு விழா நடத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

தி. தா. அல்லித்துறை:

5—4—57ல்- மேற்படி கிராம தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் வி. எம். கணேசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எம். கரிகாலன் செயலாளராகவும், ஏ. என். வெங்கடாசலபதி துணைச்செயலாளராகவும், ஏ. ஒ. முத்து பொருளாளராகவும், ஒ. இராமச்சந்தர் மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சித்தமல்லி:

5—4—57ல், சித்தமல்லி தி. மு. கழக துவக்கக் கூட்டம் தோழர் ம. அம்பிகாபதி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கி. மு. கோவிந்தசாமி செயலாளராகவும், தி. கோவிந்தராசு துணைச்செயலாளராகவும், சி. த. மாணிக்கம் பொருளாளராகவும், வீ. பெத்தபெருமாள் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பட்டுக்கோட்டை-ஏனாதி:

5—4—57 மாலை 6 மணிக்கு மேற்படி கிராமத்தில் தோழர் மு. வீரய்யன் தலைமையில் அமைக்கப்பட்ட தி. மு. கழகத்திற்கு, தோழர்கள் ப. சி. ரெங்கசாமி செயலாளராகவும், சி. ரெங்கசாமி துணைச்செயலாளராகவும், மு. வீரய்யன் பொருளாளராகவும், அ. பொ. சிவானந்தம் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பழனி

பழனி நகர தி.மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் கே. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் அப்துல் ஹாதியை துணைச் செயலாளராகவும், ஒவ்வொரு வட்டங்களிலும் கிளைகள் அமைப்பது பற்றியும், கழகக் கட்டிடம் வாங்குவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி (18-வது வட்டம்)

11-4-57 இரவு 9 மணிக்கு மேற்படி வட்ட தி. மு. கழக அமைப்புக்கூட்டம் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் சோ. ஆறுமுகம் செயலாளராகவும், கே. எம். இனயதுல்லா துணைச் செயலாளராகவும், மா. கல்யாணசுந்தரம் பொருளாளராகவும் மற்றும் 8 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கை—வரணி:

7—4—57ல், நடைபெற்ற இலங்கை—வரணி தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டத்தில் தோழர்கள் க. துரைசிங்கம் செயலாளராகவும், க. செல்லத்தம்பி துணைச்செயலாளராகவும், வி. சின்னத்தம்பி பொருளாளராகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*　　*　　*

மேற்படி கிளையின் திறப்பு விழா இடைக்குறிச்சி—சிறுக்கற்குழு முற்றவெளியில், தமிழரசுக் கட்சிப் பிரமுகர் தோழர் ஏ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. இ. தி. மு. கழக பிரச்சாரக் குழுச் செயலாளர் தோழர் சு. கா. சுந்தரராசன் வரணி தி. மு. கழகக் கிளையை துவக்கிவைத்தும், தோழர் சிவசம்பு வரவேற்புரையும், இ. தி.மு. கழக பொதுச்செயலாளர் இரா. அதிமணி, தோழர்கள் ஏ. இளஞ்செழியன், இரா. திருமறவன், சங்கமாறன், அ. இராவணன், கி. செல்லையா, ஆ. சதாசிவம், தமிழன்பன் ஆகியோர் கொள்கை விளக்கமும் அளித்தனர்.

ஆலங்குடி

12-4-57 இரவு 7-45 மணியளவில், மேற்படியூர் தி. மு. கழக செயற்குழு, கழகப் பணிமனையில் தோழர் கே. வி. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது, தொகுதி வாக்காளர்களுக்கும்—உழைத்த தோழர்களுக்கும் நன்றி தெரிவித்தும், ஆலங்குடி வட்ட கிளை கழகங்கள் அமைக்க தோழர் கே. வி. சுப்பையா தலைமையில் 8 பேர்கள் கொண்ட ஒரு குழுவும், ஆர். எம். அழகப்ப செட்டியார், குமாரசாமிராசா, வேதாசலம், ஆலங்குடி கழக உறுப்பினர் தோழர் சுப்பிரமணியம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துத் தீர்மானங்களும் நிறைவேறின.

சென்னை - புரசை

மேற்படி வட்டத்தில் கழகத்திற்கென தனியிடமில்லாதிருந்தக் குறை நீக்கப்பட்டு, தற்போது புரசை - சரவண பெருமாள் முதலித் தெருவில் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் கழக வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட பொதுமக்களும், மேற்படி கிளையின் வளர்ச்சிக்கான வகையில், பங்குகொண்டு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; கிளைக் கழக உறுப்பினர்கள் ஒவ்வொரு திங்களும் தங்கள் சந்தாத் தொகையை தவறாது செலுத்தக் கோரப்படுகிறார்கள்.

பம்பாய்

8-4-57 மாலை 6-30 மணிக்கு, பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழு, தாராவி - 'திராவிட நக'த்தில் தோழர் த. மு. பொற்கோ தலைமையில் நடைபெற்றபோது, மே திங்கள் முதல் கிழமையில் பாராளு மன்றம் செல்லவிருக்கும் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. தர்மலிங்கம், ஏ. கிருஷ்ணசாமி, என். சிவராஜ் ஆகியோருக்கு, தாராவி - மாதுங்கா கிளைகளின் சார்பில் வரவேற்பளிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

முசிறி - வெள்ளூர்

8—4—57 இரவு 9 மணிக்கு, மேற்படியூர் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் எம். வி. இராதாகிருட்டினன் தலைமையில் நடைபெற்றபோது, வானொலி நிலையமொன்றும், வாசகசாலையொன்றும், தி. மு. க. மனை ஒன்றும் வாங்க நிதி நாடகம் ஒன்று நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

சென்னை- தொண்டையார்பேட்டை

7—4—57 காலை 9½ மணிக்கு, மேற்படி கிளையின் செயற் குழு நடைபெற்றபோது 5 முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டும், ஆண்டு விழா நடத்துவது பற்றிய தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

‘அபயக் குரலை’ மதிக்கமாட்டாராம்!

பிரிட்டிஷ் பிரதமர் பிடிவாதம்

இலண்டன், ஏப். 18—

ஆக்கிரமிப்பை முறியடிக்கக் கூடிய வல்லமையுள்ள ஆயுதங்களைப் பெற்றிருப்பதன் மூலமாகவே உலக சமாதானத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் பாதுகாக்க முடியும்’’ என்று ஜப்பானியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் பிரிட்டிஷ் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

‘சொல்லிவிட்டால் மட்டும் போதாது; அந்த ஆயுதத்தைச் சோதனை செய்து, திறமையாக அதைப் பயன்படுத்த முடியும் என்பதையும் உலகிற்குக் காட்டிவிட வேண்டும்,’ என்றும் அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளாராம்.

‘பிரிட்டனும்—அமெரிக்காவும் தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகளை நடத்திக்கொண்டிருந்தால் ஆசிய நாடுகள் தமது நடுநிலைமையைத் துறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்’’ என்று ஜப்பானியப் பிரதமர் எழுதியுள்ள கடிதத்திற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறெல்லாம் எழுதிவிட்டு மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

‘‘நாங்கள் சோதனை நடத்தப் போகும் இடத்திலிருந்து 4,000 மைல்களுக்கு அப்பாலுள்ள ஜப்பானுக்கு தீங்கு நேரிடும் என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.’’

‘ஜனநாயகத்தையே கொன்றுவிடும்’

ஜனாதிபதி ஆட்சி நீடிப்புக்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு

கராச்சி, ஏப். 17—

மேற்கு பாகிஸ்தானில் ஜனாதிபதி ஆட்சியை செப். 20-ந் தேதி வரையில் (மேலும் 5 மாதங்கள்) நீடிப்பதென பாகிஸ்தான் பார்லிமெண்டு முடிவு செய்திருக்கிறதாம். சர்க்கார் பிரரேபித்த இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 44 வாக்குகளும், எதிராக 23 வாக்குகளும் கிடைத்தனவாம்.

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர், ஜனாதிபதி ஆட்சி நீடிப்பதை எதிர்த்துள்ளனர்; ‘ஜனநாயகத்தையே இது கொன்றுவிடும் — அழிவு முறைக்கு வித்தூன்றும்’ என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மஞ்சள் விலை குறைந்ததற்குக் காரணம் என்ன?

ஆந்திர சட்டசபையில் விற்பனை வரிச் சட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில், நிதி அமைச்சர் காளாவெங்கட்டராவ் பேசுகையில், பண்டையக் கால பண்பாட்டிற்கு விரோதமாகப் பெண்கள் தங்கள் முகத்தைப் பவுடர் மூலம் அழகுபடுத்திக்கொள்வதாலும், மஞ்சள் பூசிக்கொள்ளும் முறை மறைந்து வருவதாகவும் மஞ்சள் விலை குறைந்துவிட்டதாகவும், மேலும் சூயஸ்கால்வாய் நெருக்கடியின் காரணமாக ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஊதிய அறிவிப்பு

டிக்கெட் பரிசோதகர்கள்முறைவிடு

சென்னை, ஏப். 19—

தென் இரயில்வே சென்னைப் பகுதியைச் சேர்ந்த டிக்கெட் பரிசோதகர்கள் கூட்டம் திரு. பி. எஸ். ஜேம்ஸ் தலைமையில் சென்னை சடற்கரை இரயில் நிலயத்தில் நடைபெற்றபோது, இரயில்வே ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு டிக்கெட் பரிசோதகர்களுக்கு நன்மையைத் தரவில்லை என்றும், ரூ. 80—160 வரை உள்ள விகிதத்தில் டிக்கெட் பரிசோதகர்களும் சேர்க்கப்படவேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

‘எந்த நாட்டிற்கு உரிமை உண்டு?’

பண்டிதர் குரலெழுப்புகிறார்

புதுடில்லி, ஏப். 18—

உலக வல்லரசு நாடுகள் அடிக்கடி அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடுவதும், இந்த சோதனைகளுக்குத் தடை விதிக்கவேண்டுமென்றும் பல நாடுகள் அறிவுறுத்தி வருவது தெரிந்த ஒன்றாகும்.

‘‘உலகிலுள்ள மனித சமுதாயத்திற்கே பேராபத்தை உண்டுபண்ணக்கூடிய அணு ஆயுதங்களை வெடிக்க வைத்து, வாயுமண்டலத்தை விஷப்படுத்துவதற்கு சர்வதேச சட்டப்படியாவது, நியாயத்தின் அடிப்படையிலாவது எந்த நாட்டிற்காவது உரிமை உண்டா என்று பரிசிலனை செய்யுமாறு சட்ட நிபுணர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்’’ என்று, பண்டித நேரு ஆசியாவின் சட்ட ஆலோசனைக் குழு முதலாவது கூட்டத்தில் குரலெழுப்பியிருக்கிறார்.

சப்பான், இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோனேஷியா, இராக், சிரியா முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

அழிவுச் சாதனங்கள் யாரிடம் அதிகம்?

வாஷிங்டன், ஏப். 18—

அமெரிக்க அணுசக்திக் குழுவின் அங்கத்தினரான ஜேம்ஸ் வான் சாந்த், அமெரிக்க அணுசக்தி நிலையை குறிப்பிடுகையில், தற்போது அமெரிக்காவசம் 35,000 அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு தளவாட வசதிகளைப் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

ரஷ்யாவிடம் சுமார் 10,000 அணுகுண்டுகள் மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்படுகிறதாம்.

விற்பனை வரி!

வியாபாரிகள் சங்கமே வசூலிக்கிறதாம்!

ஐதராபாத், ஏப். 19—

விற்பனை வரிச் சட்டத்தின்மீது நடைபெற்ற ஆந்திர சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தின் போது, நிதி அமைச்சர் காளா வெங்கடராவ் பேசுகையில், பீமாவரம் வியாபாரிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் வியாபாரிகளின் விற்பனைக் கணக்குகளைப் பரிசிலனை செய்து, அதற்கான விற்பனை வரித் தொகையை சங்கமே வசூலித்து அரசாங்கத்திற்குச் செலுத்துவதாகவும், வரி கட்ட மறுப்பதையும், ஏமாற்றுவதையும் சட்ட நடவடிக்கையின் மூலம் இந்தச் சங்கம் தடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மற்ற வியாபாரிகள் சங்கமும் இதை ஒரு எடுத்துக் காட்டாக மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

கோபிசெட்டிப்பாளையம் பதிவு பெறாத அரசாங்க அலுவலர் முதலாவது மாநாடு

21—4—57-ல் பவானி சாகர் சமுதாய நல மண்டபத்தில், காலை 8-மணிக்கு நடைபெறும் ஊர்வலத்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கும். தோழர் சே. கண்ணன் குட்டி தலைமை தாங்குவார்.

சென்னை—8-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

21—4—57 காலை $8\frac{1}{2}$ மணிக்கு மேற்படி செயற்குழுக் கூட்டம், (16/99, அம்மன் கோவில் தெரு) தோழர் என். வி. என். இல்லத்தில் நடைபெறும்; அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

வளவனூரில்

கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு

பாராட்டுக் கூட்டம்

21—4—57 மாலை 6 மணிக்கு வளவனூர் தி. மு. கழகச் சார்பில், துரௌபதை அம்மன் கோயில் திடலில் ஓர் பாராட்டு கூட்டம் நடைபெறும். அன்று, ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராஜ், சி. நடராசன், எம். ஆனந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

பாராட்டுக் கூட்டம்

20—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை 10-வது வட்டம் (அம்மன் கோயில்) சண்முகராயன் தெருவில் (பிரபாத் அருகில்) தோழர் வி. அன்னமலை தலைமையில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியவர்களைப் பாராட்டி ஓர் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ. எஸ். வேணு, வி. சி. நமிர்தாசன், வே. திருநாவுக்கரசு, தோழியர் ஜி. பி. அருந்தா ஆகியோர் பேசுவர்.

சத்தியவாணிமுத்து அவர்கட்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம்

20—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை — 24-வது வட்டம் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற சார்பில், குயப்பேட்டை—வள்ளுவ பண்டாரம் தெருவில், தோழர் ஆ. மதுரை தலைமையில் ஓர் பாராட்டுப் பொதுக் கூட்டம் நடைபெறும் தோழர்கள் கண்ணதாசன், என். சிவராந்தினம், எஸ். எஸ். தென்னரசு, அ. உ. நடராசன் ஆகியோர், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டிப் பேசுவர்.

திருவண்ணாமலை தொகுதியில் வெற்றி வெற்ற தோழர்களுக்கு

பாராட்டுக் கூட்டம்

21—4—57 மாலை 6 மணிக்கு வேட்டவலம் ரோடில், தோழர் எஸ். முநகையன் தலைமையில், மேற்படி பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், ரங்காச்சாரி, கே. வி. குப்புசாமி, ஏ. கலீல் ஆகியோர் பேசுவர்.

வெற்றி பெற்ற தோழர்கள் ப. உ. சண்முகம், பி. எஸ். சந்தானம், இரா. தர்மலிங்கம் ஆகியோர் நன்றியுரை வழங்குவர்.

‘அண்ணா அறிவகம்’ துவக்க விழா

22—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை — எழுகிணறு, ஆணைக்காரகோனார் தெருவில், தோழர் வி. முனுசாமி எம்.சி. தலைமையில், ‘அண்ணா அறிவகம்’ துவக்க விழாவும், வெற்றி பெற்ற தோழர்களுக்குப் பாராட்டு விழாவும் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்க விழாவாற்றுவார்.

தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொள்வர்.

77 கிளர்ச்சிக்காரர்கள் படுகொலையாயினர்

மணிவா மாவட்டத்திலுள்ள கிராமங்களில் நடைபெற்ற போராட்டத்தில் பர்மிய இராணுவம் 27 கிளர்ச்சிக்காரர்களையும், தலைமை நிலயத்தில் 50 பேர்களையும் சுட்டுக் கொன்றதாக செய்தி வெளியாகியுள்ளது.

கிளர்ச்சிக்காரர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்ட பொதுவுடைமை வாதிகள் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஈ. வெ. கி. சம்பத் பண்ணைக்காடு வருகை

பாராட்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வார்

22—4—57-ல், பண்ணைக்காடு பன்னீர் செல்வம் திடலில், பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்குப் பாராட்டும் பொதுக்கூட்டமும் நடைபெறும்; தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்குவர்; தோழர் சம்பத் அவர்கள் நன்றியுரை வழங்குவார்.

கழகக் கூட்டங்கள்

★

மதுரை:

திலகர் திடல்

21—4—57 மாலை 7-மணிக்கு

பேசுவோர்;

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். முத்து

★

செல்வநாயகபுரம்:

தி. மு. கழகத் திறப்புவிழா

21-4-57 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: காசிலிங்கம்

திறப்புவிழா: எம்.எஸ். சிவசாமி

பேசுவோர்:

என். ஜீவரத்தினம்

எப். ஏ. ஜோசப்

★

வால்பாறை:

21—4—57 பகல் 12-மணிக்கு

தலைவர்: ஆர். முத்துசாமி

பேசுபவர்: கோவை-செழியன்

(ஊர்வலமும் நடைபெறும்)

★

சோழவந்தான்:

பாண்டியனார் திடல்

22—4—57 மாலை 6-மணிக்கு

தலைவர்: கூ. குருசாமி

பேசுபவர்:

திண்டுக்கல்-சமதர்மம்

(பி. எஸ். செல்வா குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.)

சென்னை—வண்ணை தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு

20—4—57 மாலை 6-மணிக்கு மேற்படி கூட்டம், 112. சோலையப்பன் தெரு, கல்வாய் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

முகவை திருவள்ளுவர் படிப்பகத் திறப்பு விழா

22—4—57 மாலை 6-மணிக்கு இராமநாதபுரம் — இராணிசத்திரத் தெருவில், தோழர் வாசுகிநாதன் (தமிழாசிரியர், சுவாட்ஸ் உயர்நிலைப்பள்ளி) தலைமையில், தோழர் முகவை ஆர்.எஸ். பாண்டியன் படிப்பகத்தைத் திறந்து வைப்பார். தோழர் எஸ். சொக்கநாதன் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை — இராயபுரம் முத்தமிழ் மன்றம்

21—4—57-ல் இம்மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் மன்றப்பணிமனையில் நடைபெறும்.

வடசென்னை சோடாக் கம்பெனித் தொழிலாளர் ஆலோசனை கூட்டம்

20-4-47 இரவு 10-மணிக்கு, வண்ணாரப்பேட்டை-சிங்காரத் தோட்டம், 4-வது தெருவில் அமைந்துள்ள ‘உதய சூரியன் அறிவியல் மன்றம்’ அலுவலகத்தில் மேற்படித் தொழிலாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

மதுரை எம். ஜி. ஆர். படிப்பக உறுப்பினர் கூட்டம்

21-4-57 காலை 9 மணியளவில் நாடார் பள்ளித்தெரு, நாயுடு தோப்பில், மதுரை எம். ஜி. ஆர். படிப்பக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பாராட்டும்—பேச்சுப் போட்டியும்

21—4—57 வேலூர் - நேசர் மன்றச் சார்பில் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் மா. பா. சாரதியைப் பாராட்டி, தோழர் எல். சுப்பிரமணியம் தலைமையில், பழைய போஸ்டாபீஸ் லைனில் ஓர் கூட்டம் நடைபெறும்; தோழர் மா. பா. சாரதியும் கலந்துகொள்வார். அதுபோது ‘மதம் அவசியமா?’ எனும் தலைப்பில் ஓர் பேச்சுப் போட்டி நடைபெறும்; வெற்றி பெறுவோருக்குப் பரிசும் வழங்கப்படும்.

வரவேற்பும் — திறப்பு விழாவும்

20—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை - தொண்டையார்பேட்டையில், தோழர் கே. கே. சாமி தலைமையில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு வரவேற்பும், பாண்டியன் படிப்பகத் திறப்பு விழாவும் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், தமிழ்ப் பித்தன், சைதை - சம்பந்தம் அ. க. முத்தரசு ஆகியோர் பேசுவர். மாலை 4 மணிக்கு, ஒய். எம். சி. ஏ. அருகிலிருந்து ஊர்வலமொன்று புறப்பட்டு கூட்டத்திற்கு வந்து கலந்துகொள்ளும்.

சிம்சன்&குருப் கம்பெனி தி. மு. க. தொழிலாளர் தோழர்களுக்கு:

21—4—57 காலை 9 மணிக்கு மேற்படி தொழிலாளர்கள் கூட்டம், சென்னை—29-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண் 31, வாலர்ஸ் ரோடு) தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, மே விழாவும், பாராட்டு விழாவும் நடத்துவது பற்றி ஆராயப்படும்.

சேலம்—குகை திருக்குறள் கழகம் கட்டுரை — பேச்சுப் போட்டிகள்

21—4—57 காலை 10-30 மணியிலிருந்து 11-30 மணிவரை, சேலம்—குகை திருக்குறள் கழகத்தாரால், குகை-கோகுல விலாஸ் பாடசாலையில், இரு பிரிவுகள் கொண்ட கட்டுரைப் போட்டி நடைபெறும். மாலை 6 மணி முதல், குகை—திருச்சி ரோடு, இராமலிங்க சௌடேசுவரி அம்மன் தர்ம மடாலய சமரச சன்மார்க்க சபைக் கட்டிடத்தில், சொற்பொழிவுப் போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்.

‘மதிவதனன்’ — நாடகம்

21—4—57 இரவு 10 மணிக்கு, புதூர்பாளையத்தில் பள்ளிக் கட்டிட நிதிக்காக, திரு. வி. க. நாடக மன்றத்தாரால் தோழர் கோ. இறைமுடிமணி எழுதிய ‘மதிவதனன்’ என்ற நாடகம் நடைபெறும்.

திருமணங்கள்

21—4—57 காலை 8 மணிக்கு, சென்னை—பெரியமெட்டு நேவல் ஆஸ்பத்திரி ரோடு, 2-வது தெரு, 4-ம் இல்லத்தில் தோழர் அ. பொ. அரசு தலைமையில், தோழர் வே. இராசாபாதர் — தோழியர் கோவிந்தம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, க. அன்பழகன், ஏ. கே. வில்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். மாலை 6-30 மணிக்கு இன்னிசை விருந்து நடைபெறும்.

*   *   *

21—4—57 காலை 7 மணியளவில், சலங்கபாளையம் தோழர் சுப்பிரமணியம் (சுப்பு)—தோழியர் இராசம் வாழ்க்கை ஒப்பந்த விழா இராமலிங்கபுரம் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.